# அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சமாட்டோம்

Phone No 4502 — Regd. No. M. 5458
விலை அரை அணா — இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (16-6-50) ❋ வெளியூர் (17-6-50) [ இதழ் 280

## எதிர்ப்புகளுக்கிடையே பணியாற்றுகிறோம்

## திராவிடர் இயக்கம் ஏன் வளருகிறது என்பதை எண்ணிப்பாருங்கள்

—(0)—

## சமுதாயநீதியும், அரசியல்விடுதலையுமே நமது குறிக்கோள்

—(0)—

### சுதந்திர ஆட்சியில் திராவிடம் சுரண்டப்படுவதேன்?

—(:0:)—

### மதுரை மாநாட்டில் பொதுச்செயலாளர் சொற்பொழிவு

"வெள்ளையன் ஆட்சி புரிந்ததால்தான் இந்த வெங்கொடுமை என்றால், பத்து தமிழன் வெளிநாட்டுக்கு அடிமையாகச் செல்லும்போது ஏன், ஐந்து மார்வாடிகளாவது செல்லவில்லை? சென்றாலும், மலேயாவிலும் மார்வாடியாக-வட்டிக்கடைக்காரனாகத்தானே இருக்கிறான்? தமிழன் அங்கும் வண்டியிழுக்கிறான். ஏன் இந்நிலை? இக்காட்சியினை எண்ணிப்பார்க்கும்போதுதான், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று நாம் கூற வேண்டியிருக்கிறது" என்று தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மதுரை மாநாட்டில் பேசியபோது குறிப்பிட்டார்.

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத்தோழர்களே, தாய்மார்களே!! மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு இரண்டு நாட்களாக நடைபெற்று இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இந்த மாநாட்டில் கூடியுள்ள உங்கள் ஆர்வமும், உணர்ச்சியும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதென்றாலும், இயற்கையாக சர்க்காருக்கு அது மருட்சியைத்தரத்தான் செய்யும். திராவிட முன்னேற்றக் கழகம், எதிர் காலத்தில் செய்யவிருக்கும் பணியினை உங்களுக்கு இம்மாநாட்டில் பேசிய தோழர்களும், தீர்மானங்களும் மக்கள் உற்சாகம் தந்திருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இத்தனை ஆண்டுகள் நாம் இயக்கத்தில் உழைத்த பலனின் அறிகுறிதான் இந்த மாநாடு. என்றாலும், நம் கொள்கைகள் நாடு முழுவதும் பரவவில்லை. இங்கு கூடியுள்ள உங்கள் உணர்ச்சி, இம்மாநாட்டோடு இருந்து விடாமல், எங்கும் பரப்பப்படவேண்டும். நம்மீது சந்தேகப்படுவோருக்கு சாந்தமாக—அரசியல் விரோதிகளுக்கு அன்பாக, நம் கொள்கைகளை எடுத்து விளக்க வேண்டும்.

**இடையிருந்து...!**

தி. மு. கழகம், திராவிடர் கழகத்தின் ஓர் பெரும் படை. திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரண்டு போர் முனைகள். திராவிடம் கழகம், யாராலே தனிப்பட்டவராலே நடத்தப்பட்டாலும்; அது திராவிட இனம் விழிப்படைய பாடுபடும்என்பது மட்டும் உறுதி. திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் சேர்க்க களை, தேர்தலில் கலந்து கொள்ளாதவர்கள் உள்ள கழகம் என்று, யாரும் எண்ணத் தேவையில்லை. அரசியல் ஆருடக்காரர்கள் இரண்டு வகையிலே ஆயாசப்படுகிறார்கள். திராவிட இயக்கப் போர்வையைப் போர்த்திக்கொண்டு தேர்தலில் ஈடுபடலாம் என்பவர் ஒருவர். தங்களிடம், உள்ளபத்திரிகை—வலிவு—பணபலம்—ஆகியவற்றால் நம்மை இழுத்துவிட்டு, தோற்கடித்துவிடலாம் என்று எண்ணுகின்றனர் மற்றொருவர். இப்படி ஒருபக்கம் நம்மை சர்க்கார் இழுக்கிறது, மற்றொரு பக்கம் சுயநலவாதிகள் இழுக்கின்றனர். இதற்கிடையே இருந்து நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது! இப்படி, நாம், பலாத்காரத்திலும், பதவிப் போட்டியிலும் ஈடுபடாத நம்மைக் கண்டு அரசாங்கம், இவர்களின் நோக்கம் தான் என்ன? என்று யோசிக்கிறது.

**நாம் வளருகிறோம்!**

ஒரு மரம்-பூக்கள் இல்லை-பழம், பசுந்தளிர் இல்லை—ஆனால் வளர்கிறது! சிறுவர்கள் கல் கொண்டு வீச, அதிலே கனிகளில்லை—பறவைகள் தங்க—தூங்க இடமில்லை—யோகிகள் தங்க அந்த மரம் நிழல் தரவில்லை—கோடாரி கொண்டு வெட்டினாலும், வெந்நீர் விட்டு வேர் வைத்தாலும், அந்த மரம் வளர்கிறது! ஒரு கிளை ஒடிந்து விழுகிறது. ஆனாலும் வளர்கிறது!! கார் ஓட்டத்தெரியாதவர்கள் அதில் மோதி அழிய கப்பல் கட்டுவதற்கு மரக்கலமாக-தச்ச வேலைக்கு மரமாக-தூக்குமேடையாக - அம்மரம் பயன் படலாம்—ஓவியக்கார

(3-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு ரூ. 8,424 கோடி

### ரஷியாவின் வரவு செலவுத் திட்டம்

மாஸ்கோ, ஜூன். 14—

நேற்று இரவு ரஷியாவின் நிதி அமைச்சர் தோழர் அர்சேனி சவேரி, ரஷிய வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தார். அதில் நாட்டுப் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 70,940 மில்லியன் ரூபிள்களாகும் அதாவது, ரூ. 8,424 கோடி. இத்தொகை நாட்டு மொத்த வருவாயில் 18½ சதவிகிதம் ஆகும்.

வரவு செலவுத்திட்டம் பின் வருமாறு:—

மொத்த வருமானம் சுமார் ரூ 75,600 கோடி மொத்த செலவுசுமார் ரூ. 74,882 கோடி. மிச்சம் சுமார் ரூ 718 கோடி.

வரவுசெலவுத்திட்டம்பற்றி பேசியபோது, நிதி அமைச்சர் நாட்டுவருவாயில் பெரும் பகுதி தேசிய பொருளாதார—கலாசார முன்னேற்றத்துக்கும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் செலவிடப்படுவதாகக் கூறினர்.

## அரிசிப் பங்கீட்டளவு குறைக்கப்படுகிறது

## 8 அவுன்சை 7 அவுன்சாக்க முயற்சி

### அளவு குறைவது பற்றி ஆலோசனைக் குழுவில் எதிர்ப்பு

சென்னை, ஜூன் 14—

"அரிசி ரேஷனை 8 அவுன்சிலிருந்து 7 அவுன்சாகக் குறைப்பதுபற்றி, உங்களுடைய யோசனைகளைக் கேட்க விரும்புகிறேன். உணவுப் பங்கீட்டைக் குறைப்பது என்பது வரவேற்கத்தக்கதாக இராது என்பது உண்மையே. ஆயினும், உணவு நெருக்கடியைத் தீர்க்க இதைவிட வேறு வழியிருப்பின் தெரிவிக்கவேண்டுகிறேன்.'

என்று சென்னைப் பிரதமர் தோழர் குமாரசாமிராஜா அவர்கள், புதன்கிழமையன்று, உணவு ஆலோசனைக் குழு முன் பேசுகையில் குறிப்பிட்டார்.

மந்திரிகளும், உத்தியோகஸ்தர்கள் பலரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

முதலமைச்சர் ராஜா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"உணவு நெருக்கடியைத் தீர்த்து மக்களைப் பட்டினியினின்றும், பசியினின்றும் காக்க வேண்டியது நம் பொறுப்பாகும். இது சம்பந்தமாகப் பேச நாம் கூடியது, இது மூன்றாவது முறையாகும்.

சென்ற ஆண்டு இருந்ததைவிட, இப்பொழுது உணவு நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது. ஆனால், இந்த நிலைமை நீடிக்கும் என்று சொல்வதற்கில்லை. பருவ நிலையில், மாற்றங்கள் காணப்பட்டுவருகின்றன. இவ்வாண்டு பருவமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிமழைபெய்யுமானால், இதன் பலனை அடுத்த ஆண்டில்தான் காண முடியும். அதுவரையில் உணவுப்பஞ்சம் நீடிக்கத்தான் செய்யும். ஆகவே, இந்நிலையைச் சமாளிக்க நம்மாலியன்றதை நாம் செய்யவேண்டும். இதற்கு உங்களுடைய ஆலோசனைத் தேவை" என்று கூறினர்

**எதிர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது**

இங்ஙனம், அரசியலார் உணவுப் பங்கீட்டின் அளவை மேலும்குறைப்பதற்கு உணவு ஆலோசனைக் குழுவிலேயே எதிர்ப்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுதிருக்கும் பங்கீட்டளவே மிகக் குறைவானதென்றும், சர்க்காருக்கு எவ்வளவு கஷ்டமிருப்பினும் இக்குறைந்த அளவை மேலும் குறைப்பது அறிவுடைமையாகாது என்றும் சிலர் கூறுகின்றனர்.

## சென்னையில் அரிசிப் பஞ்சம் அதிகரிக்கிறது

### 1950-ல் 2 லட்சம் டன் பற்றாக்குறை

தற்போதுள்ள சென்னை மாநில உணவுநிலை பற்றிய ஒரு விளக்கவுரை பின்வருமாறு:—

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அரிசி உற்பத்தி நிலை மிகவும் மோசமாகியுள்ளது. 1949 மே 21-ல் 4,55,669 டன்னாக இருந்தது 1950 மே 20-ல் உத்தேசமாக 2,37,000 டன்களாகக் குறைந்து விட்டது. முந்திய ஆண்டைவிட பிந்திய ஆண்டில் உற்பத்தியும் குறைந்துவிட்டது. அதாவது 1949-ல் உற்பத்தி 9,16,295 டன்கள் 1950-ல் 7,24,974 டன்கள்.

1950 மே 20 முதல் டிசம்பர் கடைசிவரையில், அரிசி கையிருப்பு, செலவு முதலிய விபரம்: ஏப்ரல் 29-ல் கையிருப்பு 2,77,007 டன்கள் மத்தியசர்க்கார் மூலம் எதிர்பார்க்கப்படுவது 1,10,000 டன்கள், எதிர்பார்க்கப்படும் உற்பத்தி, 6,97,000 ஆகமொத்தம் எதிர்பார்க்கப்படும் அளவு 1084000 டன்கள்.

## மேலும் 40,000 டன் பெட்ரோல் இறக்குமதி

புதுடில்லி, ஜூன் 15—

தென்னிந்தியாவிலுள்ள நான்கு துறைமுக நகரங்களில், பெட்ரோல் ரேஷனை எடுத்துவிட இந்திய சர்க்கார் முடிவுசெய்திருப்பதையொட்டி ஏற்கனவே இறக்குமதி செய்யப்படும் பெட்ரோல் அளவைவிட மேற்கொண்டு 40,000 டன் பெட்ரோலை, பெட்ரோல் கம்பெனிகள் இறக்குமதி செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கல்கத்தாவில் பெட்ரோல் ரேஷன், ஜூலை முதல் தளர்த்தப்படும் என்றும், செப்டம்பர் 1-ல் முதல் பெட்ரோல் ரேஷன் அடியோடு எடுபட்டுவிடலாம் என்றும் கூறப்படுகிறது.

செப்டம்பருக்குமுன் இந்தியாவிலுள்ள பெட்ரோல் நிலைமை பரிசீலனை செய்யப்படும்போது, நாட்டிலும் பெட்ரோல் ரேஷனை எடுப்பதா என்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

### காடு அழைக்கும் [illegible] பல் முளைக்கிறது [illegible]

பச்சை எல்லாம் [illegible] வதை [illegible] என்பதைக்குறித்து இப்பொழுது [illegible] ஒன்று புதிதாக முளைத்திருக்கிற[illegible] இதர [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

# மாலை மணி

சென்னை 16—6—50 வெள்ளிக்கிழமை


## ஐ. நா. முயலட்டும்

உலகில் சாந்தத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்த, எத்துணையோ 'அவதாரங்கள்', 'மகான்கள்', 'மகரிஷிகள்', 'தூதுவர்கள்', 'ஆழ்வார்கள்', 'நாயன்மார்கள்', 'பக்தர்கள்' தோன்றியும் எதனாலும் எந்த சாந்தியும், சமாதானமும் ஏற்படவில்லை!

'அவதாரங்கள்' வேண்டுமானால் தங்களைப் பொறுத்த மட்டில், சாந்தமும் சமாதானமும் பெற்றிருக்கலாமே யொழிய, அவைகளால் உலகிற்கு நன்மை ஏதும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது, மாறாக அவைகளால் துன்பங்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன.

உலகை உள்ளபடியே திருத்த வேண்டும் என்று கருதி, அறிவு வழி வாழ்க்கையை அமைத்துச் சென்ற உத்தமர்களால்தான் உலகம் ஒரு அளவுக்கு உயர்ந்து வந்திருக்கிறது. பக்தியைப் பரப்பவந்த 'அவதாரங்கள்', பக்தி வெறி, சாதி வெறி, சமயவெறி அவைகளிலிருந்து நிறவெறி ஆகிய இவைகளைக் கிளப்பி வந்ததால்தான், மக்களில் நிறத்தாழ்வு மனப்பான்மை ஆங்காங்கு வளர்ந்து, உலகம் இன்று அல்லோலகல்லோலப்பட்டு வருகிறது.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிறத்தினர்க்கு ஏற்பட்டிருக்கும் நிறவெறி, இவ்வளவு அவ்வளவு என்று அளவிட்டுக் கூறமுடியாது. அங்கு நிறவெறி போடும் கூச்சலும், ஆடும் ஆட்டமும் அகில உலகமும் கேட்கும்படி கோரத்தன்மை பூண்டிருக்கின்றன. இதனை, உலகைக் காப்பாற்றுவதற்கென்று எழுந்த ஐக்கிய நாடுகள் மன்றமும், பார்த்துக் கொண்டு தானிருக்கிறது! தென் ஆப்பிரிக்காவில் நிகழும் வெறியாட்டத்தை அடக்க, அதனால் இன்னமும் இயலவில்லை! இயலவில்லை என்பது மட்டுமல்ல, நிறவெறியைத் தாண்டமாட விடும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்திற்கு இடமும் அளித்து, மதிப்பும் கொடுத்து, அணைத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!

தென் ஆப்பிரிக்காவில் இன்று நிறவெறி கொடுங்கோலாட்சி புரிந்துவரும் மலான் சர்க்கார் பொதுவாகக் கறுப்பு நிறத்தினர்க்கும், குறிப்பாக இந்தியத் துணைக்கண்ட மக்களுக்கும் இழைக்கும் கொடுமைகள் சகிக்கமுடியாதனவாக இருக்கின்றன. தென் ஆப்பிரிக்காவின் சுதேசி மக்களை ய விரட்டுகின்றனர் என்றால், எப்படிப்பட்ட அநீதி—அக்கிரம—ஆணவ—ஆதிக்க [illegible] வெள்ளை நிறத்தினர் [illegible] வருகின்றனர் என்பதை, [illegible] அறிந்துகொள்ளலாம். [illegible] ஆறும் வெள்ளை நிறத் [illegible] எப்படி வெளிநாட்ட [illegible] அதே போல்தான் கறுப்பு நிறத்தினராகிய இந்திய மக்களும் வெளிநாட்டவராவார்கள். உண்மை இவ்வாறுகையில் அங்கு வெள்ளையர் வாழவும், கறுப்பர் வெளியேறவும் ஆன நிலைமை நீடிப்பது எவ்வாறு நீதியின் பாற்பட்டதாகும்? இந்திய மக்கள் அங்கு வாழ உரிமையற்றவர்களாக விரட்டியடிக்கப்படும் அநீதியை ஐ. நா. மன்றம் ஏனோ இன்னமும் அனுமதித்துக் கொண்டிருக்கிறது? நிறவெறி பிடித்ததையும் தென் ஆப்பிரிக்கா சர்க்காரை அடக்கி ஒடுக்க ஜனநாயகத்தத்துவத்தில் அக்கறை உள்ள பிறநாடுகள் இன்னமும் முன்வராமலிருப்பானேன்? வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த நாடுகள் என்ற முறையில், மேலைநாடுகள் மௌனம் சாதிக்கின்றன என்றால், அந்த நாடுகள் ஐ. நா. மன்றத்தில் இருந்தால்தான் என்ன இல்லாவிட்டால்தான் என்ன? இப்படிப்பட்ட நிலைமைகளால், இதுவரையில் எந்த ஒரு உருப்படியான செயலையும் அது தோன்றிய காலத்திலிருந்து சாதிக்க முடியாத ஐ. நா கலைக்கப்படுவது எவ்வளவோ மேலாகுமே! பிறகு பலப்பரீட்சையின் மூலமாவாவது ஏதாவது ஒரு முடிவு வெள்ளையர்க்கும், கருப்பர்க்கும் இடையே ஏற்பட்டுவிடுமே!

'அவதாரங்கள்' செய்ய முடியாத சாந்தியையும், சமாதானத்தையும் ஐ. நா. மன்றம் செய்து முடிக்கும் என்று, உலக மக்கள் ஆரம்பத்தில் நம்பினர். அந்த நம்பிக்கையைக் கை நழுவ விட்டுவிட வேண்டிய அளவுக்கு, ஐ. நா. மன்றம் நிலைமையைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது.

ஐ. நா. மன்றம், தென் ஆப்பிரிக்காவுக்கு அமைதியான வழிகளில் பாடங்கற்பித்தால் தான், நல்லதொரு சூழ்நிலை உலகில் ஏற்பட வசதி ஏற்படும். தென் ஆப்பிரிக்க சர்க்காரை முழு நிறவெறி மனப்பான்மையோடு உலாவ விட்டுவிட்டு, தெ. ஆ.-இந்தியா-பாகிஸ்தான் இவற்றினிடையே நிகழும் எந்த வட்டமேஜை மாநாடும், உருவான பலனைத்தரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவேதான், தெ. ஆப்பிரிக்க சர்க்காருக்கு நல்ல பாடங்கற்பிக்கும் முறையில், அதனை ஐ. நா. மன்றத்திலிருந்து விரட்டி அடிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை, கிழக்கு ஆப்பிரிக்க இந்தியர் காங்கிரஸ் நிறைவேற்றியிருக்கிறது.

**"தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் ஐரோப்பியரல்லாத எல்லாக் குடிமக்களுக்கும் முழு பிரஜா உரிமை அளிக்கும்வரை, தென் ஆப்பிரிக்காவை, ஐக்கிய நாடுகள் மன்றத்திலிருந்து விரட்டிவிட எல்லா ஜனநாயக நாடுகளும், குறிப்பாக, ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இருக்கும் சுதந்திர நாடுகள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்"**

என்பது தீர்மானமாகும். ஜனநாயகத் தத்துவத்தில் நம்பிக்கைகொண்ட நாடுகள், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முற்படுவதோடு, ஐ. நா மன்றத்தை நீதியோடும், நேர்மையோடும், துணிவோடும், திறத்தோடும் அறிவுடம்பட்ட நெறியில் கொண்டு செல்ல முனைய வேண்டும்.

சாதிவெறி, சமயவெறி, நிறவெறி, இனவெறி ஆகியவற்றை ஒழித்து அமைதியை அகில உலகத்திலும் நிலவச் செய்ய 'அவதாரங்களால்'தான் முடியவில்லை என்றால், அறிவு வழியிற்செல்லும் ஐ. நா. மன்றமாவது முயலுமாக!

## சென்னைக்கு மேலும் அரிசி

சென்னை, ஜூன் 14—

மத்திய சர்க்கார் சென்னைக்கு மேலும் 2,50,000 டன் உணவுப்பொருள் அனுப்ப உத்தேசித்துள்ளது. ஏற்கனவே தருவதாக வாக்களித்துள்ள 3,00,000 டன்னையும் சேர்த்தால் 5,50,000 டன் சென்னைக்குக் கிடைக்குமெனத் தெரிகிறது. இந்த மொத்த அளவில் 3,00,000 டன்தான் அரிசியாகத் தரப்படுமாம்.

## 'சவுக்கடி' வழக்கு

தூத்துக்குடி, ஜூன் 14—

13—6—50 செவ்வாயன்று மீண்டும் 'சவுக்கடி' வழக்கு இவ்வூர் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சர்க்கார் தரப்பு சாட்சியாக உதவி போலீஸ் சூப்பரின்டென்ட் நடராஜபிள்ளை, கலெக்டர் ஆபீஸ் சிப்பந்தி, அச்சாபீஸ் சிப்பந்தி உலகநாதன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி ஆகியோர் சார்பாக, வழக்கறிஞர்கள் பெரும்படையான், சோமயாஜுலு ஆகியோர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தனர். மீண்டும் வழக்கு 26—6—50 க்கு ஒத்தி போடப்பட்டிருக்கிறது.

## கார்டன்வாக்கர் இந்தியா வராததேன்?

லண்டன், ஜூன் 15—

காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் கார்டன்வாக்கர்தான் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்புகையில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யலாம் என்றும், ஆனால் முன்பயோசனை எதுவும் இல்லை என்றும் பிரதம மந்திரி அட்லி காமன்ஸ் சபையில் நேற்று கூறினார்.

காஷ்மீர் விஷயமாக சமரசம் செய்துவைக்க முயற்சி எடுக்கும் டிக்ஸனின் வேலை பாதிக்கப்படலாகாதென்பதற்காகவே, ஆஸ்திரேலியாவுக்கு போகும்போது அவர் இந்தியா பாகிஸ்தானுக்கு வர உத்தேசிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

## ஸ்மட்ஸ் உடல்நிலை மோசமாகிறது

பிரிடோரியா, ஜூன் 15—

ஸ்மட்ஸின் நிலைமை இன்று மிகவும் மோசமாகிவிட்டதென்று தெரியவருகிறது. டாக்டர்கள் அவர் உடல் நிலைமை பற்றி அதிகமாக எதுவும் சொல்ல தயங்குகிறார்கள். சென்றவாரம் இருந்த நம்பிக்கை இப்போதில்லை.

## திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம்

சோழவந்தான், ஜூன் 11—

தி. மு. க. செயற் குழுக் கூட்டம், இன்று பகல் 2-மணிக்கு 'பனகல் இல்லத்தில்' நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்க்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, பொன்மலை ராங்குசம், எம். எஸ். சிவசாமி, எம். எஸ். எம். மொய்தீன், சி. பி. சிற்றரசு, அம்பில் தர்மலிங்கம், ஜி. பி. சோமசுந்தரம், ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, ஏ. சித்தையன், கே. கே. நீலமேகம், பட்டுக்கோட்டை சவுரிராசன், பி. பழனிச்சாமி, மதுரை எஸ். முத்து, இரா நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன்

(கூட்டத்திற்கு வரமுடியாமைக்கு வருந்தியும், தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுவதாகவும் கடிதம், தந்தி அனுப்பிய உறுப்பினர்கள்)

சிவகெங்கை ராஜசேகரன், அருப்புக்கோட்டை சிவசண்முகசுந்தரம், குமாரதணிகாசலம், சென்னை சக்திபவாணி முத்து, நாகர்கோயில் வி. எம். ஜான்

கூட்டத் துவக்கத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கூட்டநோக்கத்தை விளக்கிக் கூறினார்.

பின்னர், அரசியலாரால் அண்மையில் 1-வது பாரம் முதல், 10-வது பாரம் வரை பள்ளிகளில் கட்டாய பாடமாக இந்தியைப் புகுத்தப்பட்டு, உடனே ஓராண்டு நிறுத்திவைத்துள்ள உத்திரவு பற்றியும், ஏற்கனவே பள்ளிகளில் புகுத்தியுள்ள கட்டாய இந்தியைப்பற்றியும் உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்றது. அனைவருமே தங்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தபின், ஒருமனதாக தீர்மானத்திற்கு வந்தனர்.

அடுத்தபடியாக இயக்கத் தோழர்கள் எழுதியுள்ள புத்தகங்கள் மீது, அரசியலாரால் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளைப் பற்றியும் உறுப்பினர்கள் விவாதித்தனர்.

மற்றும் மாகாண மாநாடு, உறுப்பினர் சேர்த்தல் ஆகியவைகளைப் பற்றியும், உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. அரசாங்கத்தார், அரசியல் மொழி என்ற பெயரில், இந்தியை இரண்டாவது மொழி என்ற பெயருடன் பள்ளி மாணவர்களுக்கு முதல் பாரம் முதல் கட்டாயப்படுத்தியிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதுடன், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மாணவர்கள், மூன்று மொழியைப் பயில்வது மிகவும் கடினமாகையாலும், ஆங்கிலத்தை விலக்குவது அறிவு வளர்ச்சியையே தடுப்பதாக ஆகுமாதலாலும், அரசியலார் அடுத்த பள்ளி ஆண்டு தொடங்கு முன்பாவது வேண்டுமானால் இந்தியை விருப்பப்பாடத்தில் ஒன்றாக அமைக்க வேண்டுமெனவும், அவ்வாறு செய்யாவிடில் நேரடி நடவடிக்கை துவக்க நேரிடுமென தி. மு. க. செயற்குழு தீர்மானிக்கிறது.

2. இயக்கத் தோழர்கள் எழுதியுள்ள புத்தகங்களின் மீது, அரசாங்கத்தார் நடத்தும் வழக்குகளில் அபராதம் விதிக்கப்பட்டால், எவரும் அபராதம் கட்டுவதில்லையென தி. மு. க. செயற்குழு தீர்மானிக்கிறது.

கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டு, இனிது முடிவுற்றது.

## டான்யூபில் ரஷ்ய நடவடிக்கை

பெல்கிரேட், ஜூன் 16—

டான்யூபில் ரஷ்யா நடவடிக்கைகளை எதிர்த்து யூகோ மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ளாதபடி தடுத்து வருவதை ஆட்சேபித்தும் ரஷ்யா டான்யூபகன் வெள்ளைமீது இதென்று குற்றம் சாட்டியும் யூகோஸ்லாவியா இரண்டாவது குறிப்பை ரஷ்யாவுக்கு அனுப்பியிருக்கிறது.

டான்யூபில் ரஷ்ய நடவடிக்கை கோடை காலம் முழுவதும் நீடிக்கும் என்று சொல்லப்படுகிறது.

## டெலிவிஷனில் கண்ட தற்கொலை நிகழ்ச்சி

டெக்ஸாஸ், ஜூன் 15—

மேன்பால் பந்தயம் டெலிவிஷன் செய்யப்பட்டுக்கொண்டிருந்தபோது, ஒருவன் அந்த இடத்திற்கு வந்து துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு மாண்டான்.

இச்சம்பவத்தை டெலிவிஷன் மூலம் பார்த்த நீதிபதி, வீட்டைவிட்டு நகராமலேயே தற்கொலை காரணமாக அம்மனிதன் இறந்தான் என்று விசேஷ விசாரணை தீர்ப்பைக் கூறிவிட்டார்.

## நெருக்கடியைத் தீர்க்க உணவை சேகரித்துவைக்கவும்

பெர்னே, ஜூன் 15—

அவசர நிலைமை ஏற்பட்டால், நெருக்கடியில் உபயோகிக்கப்படும் பொருட்டாக ஒவ்வொரு பிரஜையும், உணவுப் பொருள்களை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று சுவிஸ் சர்க்கார் முன்னெச்சரிக்கை செய்திருக்கின்றனர். இதனால் யுத்தம் வரும் என்று அர்த்தமில்லை என்றும் சர்க்கார் விளக்கியிருக்கிறது.

## ஏஜெண்டு தோழர்களுக்கு

ஏஜெண்டு தோழர்கள் பாக்கித்தொகையை, இம்மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்கு, மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்
"மாலைமணி"

